பாதுகாப்பு அமைச்சு

# தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் (NBRI)

# வெற்றிடங்கள்

தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனத்தின் மாவட்ட அலுவலகங்களில், நிலச்சரிவு ஆராய்ச்சி மற்றும் இடர் முகாமைத்துவப் பிரிவின் கீழ் உள்ள சிரேஷ்ட விஞ்ஞானி பதவிக்கு இலங்கை பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. இப்பணியில், ஒட்டுமொத்த நிலச்சரிவு இடர் முகாமைத்துவ உத்திகளைச் செயற்படுத்துதல், தொழில்நுட்பத் தலைமைத்துவம் மற்றும் பணியாளர்களுக்கு பயிற்சி வழங்குதல், ஆய்வுக் குழுக்களின் நியமிக்கப்பட்ட தொழில்நுட்பக் குழுக்களுக்குப் பங்களித்தல், நிலச்சரிவு விசாரணைகளை நடத்துதல், இடர் முகாமைத்துவ நடவடிக்கைகளைச் செயற்படுத்துதல் மற்றும் விரிவான தொழில்நுட்ப அறிக்கைகளைத் தயாரித்தல் என்பன அடங்கும்.

சிரேஷ்ட விஞ்ஞானி **AR - 2** (கண்டி, களுத்துறை, நுவரெலியா, பதுளை, மாத்தளை, கேகாலை, இரத்தினபுரி, காலி, மாத்தறை, குருநாகல் மாவட்டங்களில் உள்ள ஒவ்வொரு அலுவலகத்திற்கும் ஒரு அதிகாரி) (10 பதவிகள்)

**வெளிவாரி:**

**தகைமைகள் : (பின்வரும் அ அல்லது ஆ)**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட இயைபான துறையில் சிவில் பொறியியலில் நான்கு (04) வருட சிறப்பு இளமானிப் பட்டம்.

**மற்றும்**

ஒரு பட்டப் பின்படிப்புத் தகைமை (Master's) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் தொடர்புயை துறையில் கூட்டுவர்த்தக அங்கத்துவம்.

**மற்றும்**

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியலில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடகால அனுபவம்.

**அல்லது**

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் / விஞ்ஞானம் / தொழில்நுட்பம் அல்லது பதவிக்குப் பொருத்தமான பாடசேர்க்கையுடன் தொடர்புடைய துறையில் சிறப்பு இளமாணிப் பட்டம்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் ஒரு கலாநிதிப் பட்டம் (Ph.d)

ஆரம்பப் பட்டத்தைப் பெற்றுக்கொண்டதன் பின் அரச கூட்டுத்தாபனம், நியதிகள் சபை, நிறுவனம் அல்லது கீர்த்தி வாய்ந்த தனியார் நிறுவனமொன்றில் சிவில் மற்றும் கட்டமைப்பு பொறியியலில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால அனுபவம்.

**உள்வாரி:**

**தகைமைகள்: (பின்வரும் அ அல்லது ஆ)**

(அ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் / விஞ்ஞானம் / தொழில்நுட்பம் அல்லது பதிவிக்குப் பொருத்தமான பாடசேர்க்கையுடன் தொடர்புடைய துறையில் ஒரு சிறப்பு / பொதுப் பட்டம்.

**மற்றும்**

ஒரு பட்டப் பின்படிப்புத் தகைமை (Master's) அல்லது அங்கீகரிக்கப்பட்ட தொழில்சார் நிறுவனத்தின் தொடர்புயை துறையில் கூட்டுவர்த்தக அங்கத்துவம்.

**மற்றும்**

பதவியுடன் தொடர்புடைய பாடப்பரப்பில் கல்வி / ஆராய்ச்சி - (AR 1) தொகுதியின் பதவியொன்றில் குறைந்தபட்சம் எட்டு (08) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**அல்லது**

(ஆ) பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினால் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்திலிருந்து பெற்றுக்கொண்ட பொறியியல் / விஞ்ஞானம் / தொழில்நுட்பம் அல்லது பதவிக்குப் பொருத்தமான பாடசேர்க்கையுடன் தொடர்புடைய துறையில் ஒரு சிறப்பு / பொதுப் பட்டம்.

**மற்றும்**

தொடர்புடைய துறையில் ஒரு கலாநிதிப் பட்டம் (Ph.d)

**மற்றும்**

பதவியுடன் தொடர்புடைய பாடப்பரப்பில் கல்வி / ஆராய்ச்சி - (AR 1) தொகுதியின் பதவியொன்றில் குறைந்தபட்சம் ஐந்து (05) வருடகால திருப்திகரமான சேவைக் காலத்தைப் பூர்த்தி செய்திருத்தல்.

**கவனிக்கவும்: இயைபுடைய துறையில் ஆராய்ச்சி அனுபவம் மேலதிக தகுதியாக கவனத்திற் கொள்ளப்படும். தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரிகள் நிறுவனத்தின் தேவைக்கேற்ப தொடர்புடைய மாவட்ட அலுவலகங்களுக்கு கட்டாயம் இடமாற்றம் செய்யப்படுவர்.**

**பொதுவான நிபந்தனைகள்:**

| | | |
|---|---|---|
| **சம்பள அளவு** | - | AR - 2 (ரூபா 133,220 - 10x3600 - 169,220.00 ) |
| **அடிப்படை சம்பள நிலை** | - | ரூபா 116,763.00 (01/2025 முகாமைத்துவச் சேவை சுற்றறிக்கையின் iiஆம் அட்டவணையின் பிரகாரம்) |
| **வயதெல்லை:** | - | 30 வயதிற்குக் குறையாமலும் 55 வயதிற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும். உள்வாரி விண்ணப்பதாரிகளுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல |
| **ஏனைய நன்மைகள் :** | * | வாழ்க்கைச் செலவுப் படி |
| | * | 12% EPF உரித்தாகும் மற்றும் நிறுவனத்தினால் 3% ETF பங்களிப்பு செய்யப்படும். |
| | * | அரச சுற்றுநிருபத்தின் பிரகாரம் வருடாந்த போனஸ் |
| | * | மாதாந்த செயலாற்றுகை ஊக்குவிப்பு |
| | * | மருத்துவ மற்றும் ஆயுள் காப்புறுதி |
| | * | தொலைபேசி கொடுப்பனவுகள் |
| | * | அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஏனைய நன்மைகள் |

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள் மற்றும் நியாயாதிக்க நிறுவனத்தில் பணியில் உள்ளவர்கள் தமது விண்ணப்பங்களை நிறுவனத் தலைவரின் ஊடாக அனுப்புதல் வேண்டும். இயைபுடைய சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் முழுமையான சுய தரவுகள் அடங்கிய விண்ணப்பங்களை 2026 ஏப்ரல் 22ஆம் திகதி அல்லது அதற்கு முன் கீழே கையொப்பமிடப்பட்டவருக்குக் கிடைக்கும் வகையில் பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும். தயவு செய்து கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் விண்ணப்பிக்கும் பதவியைக் குறிப்பிடுதல் வேண்டும்.

**பணிப்பாளர் நாயகம்,**
**தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம்,**
**99/1, ஜாவத்த வீதி,**
**கொழும்பு 05.**